மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 194/2013 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சேகர் (எ) ஆறுமுகம் | நாள் | 10.09.2024 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

**வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

19) சிந்தாமணியூர் தார்சாலை தென்வடலாக செல்கிறது என்றால், சரிதான். மேற்படி தார்சாலையை ஒட்டி மேற்கில் ச.எண்.248/1A3 உள்ளது என்றால், சரிதான். மேற்படி ச.எண்.248/1A3 ன் மேற்குபுறத்தில் 2 அடி உயர கல்கட்டு ஒன்று உள்ளது என்றால், சரியல்ல. சுமார் 1/2 அடி உயரம் தான் இருக்கும். எத்தனை அடுக்குகளாக உள்ளது என்றால், ஒரே ஒரு அடுக்கு தான் உள்ளது. கருங்கல் கட்டுக்கல் என்றால், சுமார் 1 அடி உயரம் கொண்டது என்றால், சரிதான். நான் அரை அடி உயராம் தான் இருக்கும் என சொல்வது தவறானது என்றாலும், மேற்படி பகுதியில் சில இடங்களில் இரண்டு அடுக்கும், சில இடங்களில் மூன்று அடுக்குகளும் மேற்படி கல்கரை அமைந்துள்ளது என்றால், சரியல்ல.

20) மேற்படி கல்கரையை ஒட்டி மேற்கில் தென்வடலாக 4 அடி அகல மண்பாதை இருக்கிறது என்றால், கல்கரை இல்லை. ஆனால் ஒரு மண்பாதை செல்கிறது. மேற்படி பாதையை ஒட்டி மேற்குபுறமாக ச.எண்.248/1A1, ச.எண்.248/1A2, ச.எண்.248/1B ஆகியவை தென்வடலாக அமைந்துள்ளது என்றால், சரிதான். மேற்படி ச.எண்.248/1A3 மற்றும் ச.எண்.248/1B ஆகியவற்றை ஒட்டி தென்புறமாக 10 அடி அகலத்தில் மண்பாதை அமைந்துள்ளது என்றால், மண்பாதை உள்ளது. ஆனால், சுமார் 6 அடி அகலத்தில்தான் உள்ளது. (தற்போது சாட்சி மேற்படி இடத்தில் மண்பாதை எதுவும் இல்லை என்றும், விவசாய நிலம் உள்ளதாகவும் கூறுகிறார்).

21) மேற்படி 10 அடி அகல மண்பாதைக்கு வடக்கில் ச.எண்.248/1A3 ல் எனது தொகுப்பு வீடு உள்ளது என்றால், சரிதான். எனது வீட்டிற்கு கிழக்குபுறம் மின் கம்பமும், சிந்தாமணியூர் ரோட்டை ஒட்டி மேற்குபுறத்தில் ஒரு மின் கம்பமும் உள்ளது என்றால், சரிதான். என் வீட்டிற்கு எதிர்புறம் பெரியண்ணன் என்பவரின் கூரை வீடு உள்ளது என்றால், கூரை வீடு அல்ல. அட்டை வீடுதான் உள்ளது. எப்போது அட்டை

வீடாக மாற்றினார்கள் என்றால், சுமார் 10 ஆண்டுகள் இருக்கும். இவ்வழக்கு தாக்கல் செய்தபோது மேற்படி வீடு கூரை வீடாக இருந்தது என்றால், சரிதான்.

22) மேற்படி பெரியண்ணனின் வீட்டிற்கு வடக்குபுறம் ச.எண்.248/1A3 ல் மேற்குபுறமாக ஒரு மின் கம்பம் உள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1B ல் தெற்குபுறமாக எனக்கு ஒரு கூரை வீடு உள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1B ல் கிழக்குபுறமாக ஒரு மின்கம்பம் உள்ளது என்றால், சரிதான். எனது வீட்டிற்கு வடக்குபுறம் சுப்ரமணியன் என்பவரது வில்லை வீடு உள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1B ல் உள்ள மின்கம்பத்திற்கு எதிர்புறம் ஒரு பீயமரமும், அதற்கு வடபுறம் ஒரு புளியமரமும் இருந்தது என்றால், இரண்டு மரமும் இல்லை. மேற்படி மரங்கள் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வெட்டிவிட்டேன்.

23) மேற்படி புளியமரம் இருந்த பகுதிக்கு வடக்கில் பெரியண்ணனின் வில்லை வீடு இருந்தது என்றால், சரிதான். அதே சர்வே எண்ணில் பெரியண்ணனின் வில்லை வீட்டிற்கு மேற்குபுறமாக அவருக்கு மற்றொரு வில்லை வீடு உள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1A3, ச.எண்.248/1B ஆகியவற்றில் உள்ள எனது வீட்டிற்கு மேற்படி சிந்தாமணியூர் மெயின்ரோட்டிலிருந்து மேற்குபுறமாக மேற்படி சர்வே எண்களில் தென்புறமாக 10 அடி அகலத்தில் உள்ள தடவழியாகத்தான் செல்வோம் என்றால், சரிதான்.

வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.